முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை

முன்னிலை திருமதி. பி. கவிதா, பி.ஏ., எல்.எல்.பி.,

முதன்மை சார்பு நீதிபதி

எ.ம.சா. 1 தேதி.18.06.2024

| MCOP. No. | 73/2020 | | |
|---|---|---|---|
| பெயர் | இளவரசன் | த/பெ. | |
| வயது | | தொழில் | |
| ஜாதி | | மதம் | |
| கிராமம் | | தாலுக்கா | |

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டு முதல் விசாரணை

எனக்கு இந்நீதிமன்றத்தில் இருந்து அழைப்பானை வந்ததன் பேரில் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். 09.12.2019 அன்று நான் டாடா ஏஸ் வாகனத்தை ஒட்டி சென்றேன். நான் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி ஒட்டி சென்றேன். எனது வாகனத்தில் வாழை தார் ஏற்றி சென்றேன். பேருந்தில் பயணம் செய்த மனுதாரர் அவரது கைகளை ஜென்னல்களுக்கு வெளியே நீட்டி வந்ததால் எதிர்புறமாக வந்த எனது டாடா ஏஸ் வாகனத்தின் பின்புறத்தில் அவரது கை மோதி அவருக்கு காயம் ஏற்பட்டது. மனுதாரர் அப்போது பேருந்தின் மத்தியில் அமர்ந்து பயணம் செய்து வந்துள்ளார். இந்த விபத்தில் வேறு யாருக்கும் காயம் ஏற்படவில்லை. விபத்தில் பேருந்து மற்றும் டாடா ஏஸ் வாகனத்திற்கு எந்த சேதமும் ஏற்படவில்லை. காவல் நிலையத்தில் பேருந்து ஓட்டுநர் நடத்துனர் மற்றும் டாடா ஏஸ் வாகனத்தின் ஒட்டுநர் ஆகிய எங்கள் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்கள். அந்த வழக்கில் பேருந்தின் ஓட்டுநர் மற்றும் நடத்துனர் குற்றத்தை ஒப்புக் கொண்டதால் நானும் ஒப்புக் கொண்டால் தான் வழக்கு முடியும் என்று போலீசார் சொன்னதால் நானும் அதற்கு உடன்பட்டு அபராதம் செலுத்தி வழக்கை முடித்து கொண்டோம். இந்த விபத்திற்கு எனது கவனக்குறைவு எதுவும் காரணம் இல்லை.

4ஆம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை

நான் மேற்கில் இருந்து கிழக்கு நோக்கி சென்றேன். மனுதாரர் வந்த பேருந்து கிழக்கில் இருந்த மேற்கு நோக்கி வந்தது. மனுதாரர் ஒட்டுநரின் பின்புறத்தில் பேருந்தின்நடுவில் அமர்ந்து வந்தார். ஆக பேருந்தை நோக்கியபடி வலது புறத்தில் ஜன்னலின் ஓரத்தில் அமர்ந்து பயணம் செய்து வந்துள்ளார். பேருந்தின் ஓட்டுநர் இருக்கை எனது வாகனத்திற்கு ஓரமாக இருந்தது. மனுதாரரின் கை எனது வாகனத்தில் எந்த இடத்தில் அடிப்பட்டது என்றால் டாடா ஏஸ் வானத்தின் தலைபாகத்தின் பின்னால் இணைக்கப்படும் கேரியரின் உள்ள இடத்தில் உள்ள கிளாம்பில் பட்டு காயம் ஏற்பட்டது. விபத்து நடந்த இடம் பொறையாரில் இருந்து

மயிலாடுதுறை செல்லும் ரோடு ஆகும், அது இருபுறமும் பயணம் செய்ய கூடிய ரோடு ஆகும். நான் பேருந்தை ஒட்டி செல்லாமல் இருந்திருந்தால் இந்த விபத்து நடந்திருக்காது என்றால் சரியல்ல, இரண்டு வாகனங்களுக்கும் இடையே போதுமான இடைவெளி இருந்தது, ஆனால் மனுதாரர் கையை வெளியே நீட்டி வந்ததால் தான் விபத்து நடந்தது. மனுதாரர் கையை முழுவதுமாக நீட்டாமல் மடக்கியப்படி தான் வைத்திருந்தார் என்றால் சரிதான். பேருந்து ஓட்டுநரின் அஜாக்கிரதை எதுவும் இல்லை என்றால் சரிதான், நானும் சரியாக ஒட்டினேன். நான் பேருந்தை ஓட்டி செல்லாமல் இருந்தாலும், மனுதாரர் அவரது கையை ஒழுங்காக வைத்திருந்தாலும் விபத்து ஏற்பட்டிருக்காது என்றாலும் சரியல்ல.

<u>மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

நான் ஒட்டி சென்ற வாகனத்தின் எண். TN68AA6015 ஆகும். மேற்படி வாகனம் 1ஆம் எதிர்மனுதாரருக்கு சொந்தமானது. அவர் எனது வாகனத்தின் உரிமையாளர் ஆவார். சின்னப்பராஜ் வாகனத்தை காப்பீடு செய்துள்ளார். அவரது காப்பீட்டு நிறுவனத்தின் அழைப்பிதழை ஏற்று தான் நான் சாட்சியம் சொல்ல வந்துள்ளேன். நான் மேற்கில் இருந்து கிழகே சென்றேன் என்றால் சரிதான். காயம் பட்ட நபர் எதிர்திசையில் வந்த பேருந்தில் தான் வந்து கொண்டிருந்தார் என்றால் சரிதான். மனுதார் எனது வாகனத்தில் தான் காயம்பட்டார். நான் அதிவேகமாகவும், கவனக்கைுறைவாகவும், அஜாக்கிரதையாகவும், பெறுப்பற்ற தன்மையாக செயல்பட்டு வாகனத்தை ஓட்டி சென்று விபத்தை ஏற்படுத்தி மனுதாருக்கு காயத்தை ஏற்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. மனுதாரர் கோரியுள்ள தொகை அனைத்தையும் எனது வாகனத்தின் காப்பீட்டு நிறுவனம் தான் கொடுக்க கடமைப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. விபத்தை நான் ஏற்படுத்தியதை ஒப்புக் கொண்டு நீதிமன்றத்தில் அபராதம் செலுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல, பேருந்து ஒட்டுநர் முதலில் ஒப்புக் கொண்டார் நான் ஒப்புக் கொண்டால் தான் வழக்கு முடியும் என்று சொன்னதால் தான் நான் ஒப்புக் கொண்டேன். 1, 2 எதிர்மனுதாரர்களும் மற்றும் நானும் மனுதாருக்கு இழப்பீடு கொடுக்க கடமைப்பட்டுள்ளோம் என்றால் சரியல்ல. குறுக்கு விசாரணை முடிந்தது.